# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2473/26 - 2026 ජනවාරි මස 30 වැනි සිකුරාදා - 2026.01.30

*2473/26 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.-பி 9/73 (XI)

**(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(469ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 56 ஆம் மற்றும் 71 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ஹெட்டிதந்திரி பட்டபெந்திகே தம்மிக்க,**
சுற்றாடல் அமைச்சர்.

கொழும்பு,
2026, சனவரி 30.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2026 ஆம் ஆண்டின் யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிட (அரச காணிகள் மற்றும் அரச / காணிகள் அல்லாத காணிகளின் முகாமைத்துவம்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.


1A - PG 7504 — 300 (2026/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகள், பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்கென (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடம் என வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய ஒதுக்கிடத்தினுள் அமைந்துள்ளவையும் அரச காணிகளினதும் அரச காணிகள் அல்லாத காணிகளினதும் முகாமைத்துவத்துக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) எந்த யானைகளின் இயற்கை வாழிடங்கள் யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடத்தினுள் அமைந்துள்ளனவோ அத்தகைய யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடத்தினுள் யானைகள் அமைதியாக வாழ்தல்; அத்துடன்

(ஆ) நீர்வளங்களுட்பட, அத்தகைய ஒதுக்கிடத்தினுள் காணப்பட்ட அத்தகைய யானைகளின் இயற்கை வாழிடங்கள், நடமாட்டப் பாதைகள் மற்றும் இரைதேடும் இடப்பரப்புகளைப் பேணுதல்.

3. (1) இரண்டாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட அரச காணியொன்றல்லாத வேறேதேனும் காணியில் பின்வரும் அபிவிருத்திச் செயற்பாடுகளுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்கு உட்கருதுகின்ற அத்தகைய அரச காணியின் எவரேனும் அளிப்புப்பெறுநர் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அல்லது அத்தகைய வேறேதேனும் காணியின் எவரேனும் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், விடயத்துக்கேற்றவாறாக, சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கையொன்றுடன் அல்லது தொடக்கச் சூழல் பரிசோதனை ஆய்வறிக்கையொன்றுடன் சேர்த்து பின்வரும் முறையில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்திலான விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்:-

(i) சுரங்கந்தோண்டும் தொழிற்பாடொன்று;

(ii) தகர்த்தல் தொழிற்பாடொன்று;

(iii) ஏதேனும் கால்வாயின் நிர்மாணிப்பொன்று;

(iv) ஏதேனும் வீதியின் நிர்மாணிப்பொன்று;

(v) பத்துக்குமேற்பட்டவீடமைப்புக்கூறுகளைக்கொண்டுள்ளஏதேனும்வீடமைப்புக்கட்டிடத்தொகுதியை நிர்மாணித்தல்;

(vi) எவ் இடப்பரப்பின் பரப்பளவு பூச்சியம் தசம் ஐந்து (0.5) ஹெக்டேயருக்குச் சமமாக அல்லது அதற்கு மேற்படவுள்ளதோ அவ் இடப்பரப்பில் ஏதேனும் வடிவத்தில் காணியின் காணிப்பாவனைப் பாங்கை தற்காலிகமாக மாற்றுகின்ற ஏதேனும் செயற்பாடு; அல்லது

(vii) எவ் இடப்பரப்பின் பரப்பளவு ஒரு ஹெக்டேயருக்குத் குறைவாகவுள்ளதோ அவ் இடப்பரப்பில் ஏதேனும் வடிவத்தில் காணியின் காணிப்பாவனைப் பாங்கை நிரந்தரமாக மாற்றுகின்ற ஏதேனும் செயற்பாடு,

போன்ற விடயத்தில் இயைபான விண்ணப்பம் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கையொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்;

(i) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட செயற்பாடொன்று அல்லாத; அல்லது

(ii) அத்தகைய காணியின் ஏலவேயுள்ள ஏதேனும் பயன்பாட்டின் விசாலிப்பை உட்படுத்துகின்ற,

ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டின் விடயத்தில் இயைபான விண்ணப்பம் தொடக்கச் சூழல் பரிசோதனை ஆய்வறிக்கையொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(2) எவ்விடப்பரப்பின் பரப்பளவு ஒரு (1) ஹெக்டேயருக்குச் சமமாக அல்லது அதற்கு மேற்படவுள்ளதோ அவ்விடப்பரப்பில் ஏதேனும் வடிவத்தில் காணியின் காணிப்பாவனைப் பாங்கை நிரந்தரமாக மாற்றுகின்ற ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாடு யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடமொன்றினுள் அனுமதிக்கப்படுதலாகாது.

(3) இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக, ஓர் அரசகாணியின் அளிப்புப்பெறுநர் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், யானைகளுக்கான இயைபான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடம் வெளிப்படுத்தப்பட்ட திகதிக்குமுன்னர் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அத்தகைய காணி தொடர்பில் விடயத்துக்கேற்றவாறாக ஏதேனும் அளிப்பு அல்லது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள எவரேனுமாள் என்று பொருளாகும்.

4. (1) மூன்றாம் ஒழுங்குவிதியின் பந்தி (அ) அல்லது பந்தி (ஆ) அல்லது பந்தி (இ) இன்கீழான ஏதேனும் விண்ணப்பம் பெறப்பட்டதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய விண்ணப்பத்தை, விடயத்துக்கேற்ப, இயைபான சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கையுடன் அல்லது தொடக்கச் சூழல் பரிசோதனை ஆய்வறிக்கையுடன் சேர்த்து, அது பெறப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வாரங்களினுள் 7 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் தாபிக்கப்பட்ட யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிட நெறிப்படுத்தற் குழுவின் விதப்புரைகளுக்காக அதற்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் சொல்லப்பட்ட குழு அதனைப் பெற்றதன்மீது சொல்லப்பட்ட குழுவினால் அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் அதன் விதப்புரையை எழுத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உபஒழுங்குவிதியின்கீழ் சொல்லப்பட்ட குழுவினால் செய்யப்பட்ட விதப்புரைகளைக் கவனத்துட்கொள்வதன்மேல், ஒன்றில் 3 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் கோரப்பட்ட இயைபான செயற்பாட்டுக்கான அவரின் அங்கீகாரத்தை வழங்குதல் வேண்டும் அல்லது அவரின் அங்கீகாரத்தை வழங்க மறுத்தல் வேண்டும்.

(3) மூன்றாம் ஒழுங்குவிதியின்கீழ் கோரப்பட்ட செயற்பாட்டுக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதி அவரது அங்கீகாரத்தை வழங்கமறுக்குமிடத்து, அத்தகைய மறுப்பிலிருந்து இரண்டு வாரக் காலப்பகுதியொன்றினுள் அதற்கான காரணங்களைக் கொடுத்து அத்தகைய மறுப்புப்பற்றி எழுத்தில் விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபினால் இன்னலுறுகின்ற எவரேனும் விண்ணப்பகாரர் அத்தகைய முடிபின் அறிவித்தலின் திகதியின் பின்னரான முப்பது நாட்களினுள் அமைச்சருக்கு அத்தகை முடிபுக்கு எதிராக எழுத்தில் மேன்முறையீடு செய்யலாமென்பதுடன் கட்டளைச் சட்டத்தின் 56 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய மேன்முறையீடு தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

5. (1) யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஒதுக்கிடத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் அரச காணியின் எவரேனும் அளிப்புப் பெறுநர், அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர், பயிர்ச் செய்கையாளர் அல்லது இருப்பாட்சியாளர் அத்தகைய காணியைச் சேனைப் பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தும்போது கீழே குறித்துரைக்கப்பட்ட பயிர்ச்செய்கை நியமங்களைப் பேணுதல் வேண்டும்; அதாவது

(அ) சேனையினது பரப்பளவு மூன்று (3) ஏக்கர்களை விஞ்சுதலாகாது;

(ஆ) மாரிப்பயிர் நிலைமைகளின்கீழ் மட்டுமே பயிர்கள் வளர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் கமத்தொழிற் கிணறுகளோ அல்லது எவ்வகையினதுமான நிலநீர் பிரித்தெடுப்போ அனுமதிக்கப்படுதலுமாகாது;

(இ) காணியின்மீது பல்லாண்டுப் பயிர்கள் எவையும் வளர்க்கப்படுதலாகாது;

(ஈ) ஒவ்வொரு பயிரிடுகைப் பருவகாலத்தின் முடிவிலும் அறுவடையைச் சேகரித்ததன்மேலும் இரண்டாண்டுகளைக் கொண்ட கட்டாய வறள்நிலக் காலப்பகுதியொன்று இருத்தல் வேண்டும்ஃ அக்காலப்பகுதியினுள் காணியானது எவையேனும் பயிர்ச்செய்கை நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுதலாகாது;

(உ) பயிரிடுகைக் காணி சுற்றுமுறையில் பயிர்செய்யப்படுதல் வேண்டும்;

(ஊ) யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடத்தை வெளிப்படுத்தப்படுத்தும் திகதிக்கு முன்னர் பயிர்ச்செய்கை நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட இடப்பரப்புகளில் மட்டுமே பயிர்ச்செய்கைகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்;

(எ) பயிரிடுகைக் காணியைச் சுற்றிப் பொருத்தப்பட்ட மின்வேலிகளுட்பட பயிரிடுகைக் காணியைச் சுற்றியுள்ள வேலியிடுகை, பயிரின் அறுவடை சேகரிப்பு பூர்த்தி செய்யப்பட்டபின்னர் உடனடியாக அகற்றப்படுதல் வேண்டுமென்பதுடன் அடுத்த பயிரின் பயிர்ச்செய்கை தொடங்குவதற்குமுன்னர் உடனடியாக மட்டுமே மீளநிறுவப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஏ) நிரந்தரமான கட்டமைப்புக்கள் அல்லது நிரந்தரமான தன்மையினவான வேறெவையேனும் நிர்மாணங்கள் சேனைகளின்மீது அனுமதிக்கப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அளிப்புப்பெறுநர், அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், பயிர்ச்செய்கையாளர் அல்லது இருப்பாட்சியாளர் ஏற்புடையற்பாலதானவாறாக பின்வரும் எவரேனும் ஆட்களாகவிருத்தல் வேண்டும்:-

(அ) யானைகளுக்கான இயைபான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடத்தை வெளிப்படுத்தும் திகதிக்குமுன்னர் சேனைப் பயிர்ச்செய்கைக்காக அத்தகைய காணியைப் பயன்படுத்துவதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை அல்லது வேறேதேனும் எழுத்திலான அனுமதியை உடைமையில் வைத்திருக்கும் ஆளொருவர்; அல்லது

(ஆ) யானைகளுக்கான இயைபான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடத்தை வெளிப்படுத்தும் திகதிக்கு முன்னர் அத்தகைய அரச காணி எந்த அரச நிறுவனத்துக்கு உரித்தாக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் அரச நிறுவனத்தினால் பேணப்பட்ட பதிவேடுகளில் அத்தகைய அரச காணியின் ஒரு சேனைப் பயிர்ச்செய்கையாளராக எந்த ஆளின் பெயர் பதியப்படுகின்றதோ அந்த ஆளொருவர்.

6. இவ்வொழுங்குவிதிகளின் 2 ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அரச காணியொன்று அல்லாது வேறு காணியின் எவரேனும் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர்,-

(அ) பரப்பளவில் நாற்பது பேர்ச்சுகளுக்குக் குறைவான காணிச் சிறுகூறுகளாக அத்தகைய காணியை உட்பிரிவிடுகை செய்தலாகாது;

(ஆ) 7 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் தாபிக்கப்பட்ட யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிட நெறிப்படுத்தற் குழுவைக் கலந்தாலோசிப்பதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதற்காக அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, அத்தகைய காணியினுள் எவையேனும் நிரந்தரமான அல்லது பல்லாண்டுப் பயிர்களை வளர்த்தலாகாது;

(இ) அதுதொடர்பில் அத்தகைய சொந்தக்காரரினால் அல்லது இருப்பாட்சியாளரினால் அதற்காகச் செய்யப்பட்ட எழுத்திலான கோரிக்கையின்மேல் பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டாலொழிய ஏதேனும் இயற்கைக் காட்டைத் துப்புரவாக்குதலோ அல்லது அகற்றுதலோ ஆகாது.

7. (1) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்துதல் தொடர்பான கருமங்களைப் பணிப்பாளர் தலைமையதிபதி கவனத்துட்கொள்வதற்காக அவருக்கு விதப்புரைகளைச் செய்யும் நோக்கத்துக்காக, யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடத்துக்கான நெறிப்படுத்தற் குழுவாக அழைக்கப்படவும் அறியப்படவும் வேண்டிய யானைகளுக்கான ஒவ்வொரு முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடத்துக்காகவும் (இதனகத்துப்பின்னர் “குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நெறிப்படுத்தற் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) குழுவின் அமைப்பு பின்வருமாறாதல் வேண்டும்:-

(அ) யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடம் எந்த இயைபான மாவட்டத்தினுள் அல்லது மாவட்டங்களினுள் அமைந்துள்ளதோ அல்லது அமைந்துள்ளனவோ, விடயத்துக்கேற்ப, அந்த இயைபான மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் அல்லது அந்த மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள்;

(ஆ) கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்ட வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிராந்திய உதவிப் பணிப்பாளர்;

(இ) (451 ஆம் அத்தியாயமான) காட்டுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட காட்டுத் திணைக்களத்தின் மாவட்டக் காட்டு அலுவலர்;

(ஈ) 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மகாவலி அதிகாரசபையின் வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் அல்லது அவரது நியமத்தர்;

(உ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர்; அத்துடன்

(ஊ) இயைபான இடப்பரப்பின் சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் அல்லது அவரது நியமத்தர்.

(3) யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த இயைபான மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டும். யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஒதுக்கிடம் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களினுள் அமைந்திருந்து ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டச் செயலாளர்கள் இயைபான இடப்பரப்பின்மீது அதிகாரம் கொண்டிருக்குமிடத்து, மிகப்பெரிய காணி இடப்பரப்பைக்கொண்ட மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

(4) குழுவின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகைதராதவிடத்து சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் அக்கூட்டம் தொடர்பில் தம்முள்ளிருந்து தவிசாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி குழுவின் செயலாளராக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிராந்திய உதவிப் பணிப்பாளரை நியமித்தல் வேண்டும்.

(6) குழுவானது அவசியமானவாறாக அடிக்கடியாக, ஆனால் ஒவ்வொரு மூன்று மாதங்களிலும் ஒரு தடவைக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

(7) குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் செயலாளருட்பட மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(8) குழுவுறுப்பினரொருவர் எந்தப் பதவியை வகிப்பதன் பயனைக்கொண்டு குழுவின் உறுப்பினரொருவராக உள்ளாரோ அந்தப் பதவியை அத்தகைய உறுப்பினர் வகிக்கும்வரை அவர் பதவிவகித்தல் வேண்டும்.

(9) குழுவானது அவசியமெனக் கருதும்போதெல்லாம், 4 ஆம் ஒழுங்குவிதியின்கீழான விதப்புரைகளைச் செய்வதன்மீது அவர்களின் கருத்துக்களைக் கவனத்துட்கொள்வதற்கு,-

(அ) பேணல் உயிரியல், சூழல் விஞ்ஞானம் அல்லது சூழல் சட்டம் என்ற துறையில் கல்விசார் அல்லது உயர்தொழில்சார் தகைமைகளையும் பரந்த அனுபவத்தையும் உடைய நிபுணர்களை; அல்லது

(ஆ) யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடம் எந்த இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்பில் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் பிரதிநிதிகளை,

குழுவானது கலந்தாலோசிக்கலாம்.

(10) குழுவின் ஒவ்வொரு முடிபும் சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் வாக்குப்பெரும்பான்மைமூலம் எடுக்கப்படுதல் வேண்டும்.

(11) வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில் தவிசாளர் பதவியை வகிக்கின்ற ஆள் அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதல் வேண்டும்.

(12) குழுவின் உறுப்பினரொருவர் அல்லது குழுவின் தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனுமாள், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக 2 ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் காணிப்பரப்பைச் சோதனையிடும் நோக்கத்துக்காக நியாயமான எல்லா நேரங்களிலும் அத்தகைய காணியின்மீது உட்பிரவேசிக்கலாம்.

(13) குழுவின் பணிகள் பின்வருவனபற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விதப்புரைகளைச் செய்வதற்கானவையாக இருத்தல் வேண்டும்:-

(i) செயல்முறைக்குகந்தமுறையில் இயன்றதாகவிருக்கும்வரை விரைவாக, 4 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கருமங்கள்மீது;

(ii) மனிதருக்கும் யானைகளுக்கும் இடையேயான முரண்பாடுகளைத் தணிப்பதன்மீது;

(iii) எவ்யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடம் கட்டளைச் சட்டத்தின் 2அ என்னும் பிரிவின் நியதிகளின்படி பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட முகாமை செய்தல் திட்டமிடல் குழுவினால் கவனத்துட்கொள்ளப்பட வேண்டியதற்கு அவசியமாகின்றதோ அவ் யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஒதுக்கிடத்தின் காணிப் பயன்பாட்டை ஒழுஞ்குபடுத்துவதன் மிதுூ அத்துடன்

(iv) யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடத்தினுள் சூழல்சார் பிரச்சினைகளுக்கு இயைபான வேறேதேனும் கருமம்.

8. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் கட்டளைச் சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

9. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

“அபிவிருத்திச் செயற்பாடு” என்பது, கட்டளைச் சட்டத்தில் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“பணிப்பாளர் தலைமையதிபதி” என்பது, கட்டளைச் சட்டத்தின் 68 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்.

"சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை என்று பொருளாகும்;

“தொடக்கச் சூழல் பரிசோதனை அறிக்கை” என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் சமர்ப்பிக்கப்படவேண்டிய தொடக்கச் சூழல் பரிசோதனை அறிக்கை என்று பொருளாகும்;

“அரச காணியொன்று அல்லாத வேறேதேனும் காணியின் இருப்பாட்சியாளர்” என்பது, அதன் சொந்தக்காரரின் எழுத்திலான அனுமதியுடன் யானைகளுக்கான முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்கிடமொன்றினுள் அரச காணியொன்றல்லாத வேறு ஏதேனும் காணியில் இருப்பாட்சிகொள்கின்ற ஆளொருவர் என்று பொருளாகும்;

“கட்டளைச் சட்டம்” என்பது, (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் என்று பொருளாகும்;

“அரச காணி” என்பது, கட்டளைச் சட்டத்தில் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

EOG 01 - 0290